THE HON. SRI M. A. MANICKAVELU : ஆபரேஷன் செய்துகொள்வதில் ஆரோக்கியம் அதிகப்படுகிறது என்றுகூட தகவல் இருக்கிறது. (சிரிப்பு).

Basic Schools

*21 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதியமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) ஆதாரப் பள்ளிகளில் நாள் ஒன்றுக்கு எத்தனை பீரியட் வகுப்பு நடத்தப்படுகிறது?

(ஆ) அதில் எத்தனை பீரியட் நூல் நூற்பு வகுப்பு நடத்தப்படுகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Seven periods lasting for a total duration of five hours.

(*b*) Two hours are allotted for craft work in a day. Out of this, one hour is spent on spinning.

SRI V. K. KOTHANDARAMAN: இந்த நூல் நூற்பதற்குமட்டும் இந்த அளவுக்கு 'பீரியட்' ஒதுக்கப்படுவதால் மாணவர்களுடைய கல்வித் தரம் சிறிய வயதிலே குறைந்துவிடுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ஆதாரக் கல்வியினுடைய அடிப்படை தெரியாமல் பேசுவது என்று எண்ணப்படுகிறது. ஏனென்றால், நூல் நூற்பது என்றால் வெறும் நூல் நூற்பது மட்டுமல்ல, அதன் மூலம் கல்வி பயிலவேண்டுமென்பதுதான் நோக்கம். இம்மாதிரி தொழில் மூலம் கல்வி கற்றால், அனுபவமும் அறிவும் வளருகிறது என்று இப்பொழுது எல்லா குழந்தை உள்ளத் தத்துவ ஞானிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், இதனால் அறிவோ, படிப்போ குறைந்துவிடுகிறது என்று கருதுவது தப்பான கருத்து.

Anandam Soap Factory, Gudiyatham

* 22 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் உதவிபெற்று, வடாற்காடு ஜில்லா, குடியாத்தத்தில் நடத்தப்படும் ஆனந்தம் சோப் பாக்டரி இப்போது நடைபெறுகிறதா ?

(ஆ) அது எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) எப்போது மூடப்பட்டது ?

(ஈ) அதற்கு எவ்வளவு பணம் கடனாக கொடுக்கப்பட்டது ?

(உ) அதைத் திருப்பி வசூல் செய்ய அரசாங்கத்தார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No Soap Factory at Gudiyatham by name Anandam Soap Factory has been given any assistance from Government. Only at Ranipet, there is an Industrial Co-operative Society by name Anandam Harijan Soap